12 OCT 2015
EASTERN UNIV... RAR

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part III Examination in Bachelor of Administration - 2010/2011 (September 2015)

## (Proper/Repeat)

## EXB 406 Independent Study (Research Methods)

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

1. (a) ஆய்வு என்னும் பதத்தினை வரைவிலக்கணம் செய்க.

   (b) சிறந்த ஆய்வின் ஒன்றின் பண்புகளை சுருக்கமாக விளக்குக.

   (c) ஆய்வின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

   (d) பின்வரும் ஆய்வுத் தலைப்புகள் எந்த வகையினைச் சார்ந்தது என அடையாளம் காண்க:

      (i) ஊழியர்களின் செயற்றிறன் மீது தொழில் பயிற்சி ஏற்படுத்தும் தாக்கம்.

      (ii) இறக்குமதி வரிக் கொள்கைகள் மீதான நிறுவன உரிமையாளர்களின் மனப்பாங்கு.

      (iii) நிறுவன முகாமையாளர்களின் எண்ணக்கருவாக்கத் திறன்கள்

      (iv) பணவீக்க வீதத்திற்கும் பொருளாதார வளர்ச்சி வீதத்திற்குமான தொடர்பு.

      (v) தொழிநுட்ப வளர்ச்சி வேலையின்மை மட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கம்.

(20 புள்ளிகள்)

2. (a) ஆய்வுப் பிரச்சினையானது "ஆய்வு விடயம்" மற்றும் "ஆய்வுக் குடித்தொகை" எனும் இரண்டு அம்சங்களை கொண்டிருக்கும். விளக்குக.

(b) காரண காரிய வகை சார்ந்த ஆய்வுகளில் அடையாளம் காணக்கூடிய மாறிகளை உதாரணம் மூலம் விளக்குக.

(c) ஆய்வுகளில் எண்ணக்கருக்கள் எவ்வாறு நடைமுறையாக்கம் செய்யப்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(d) ஆயவுக் கருதுகோள்களின் வகைகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

3. (a) ஆய்வுகளில் நூலாய்வின் முக்கியத்துவத்தை விளக்குக.

(b) வங்கிகளின் நிதிச் சேவைகளினனும் வங்கி அல்லா நிதி நிறுவனங்களின் நிதிச் சேவைகளினனும் வினைத்திறன்களை ஒப்பீட்டு ஆய்வு செய்ய பொருத்தமான ஆய்வமைப்பு (Study Design) ஒன்றினை சிபாரிசு செய்து அதனை வரைபட உதவியுடன் விளக்குக.

(c) பின் ஆய்வு வடிவமைப்பு (After only Study Design) எவ்வகையான ஆய்வுப் பிரச்சினைகளுக்கு பொருத்தமானதாக அமையும் என ஆராய்க.

(d) பரீட்சித்தல் ஆய்வு வடிவமைப்பு (Experimental Study Design) முறையினை விளக்குக.

(20 புள்ளிகள்)

4. (a) தரவு திரட்டும் கருவியின் நம்பகத்தன்மை (Reliability of Instrument) நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

(b) நேர்காணல் முறை மூலம் தரவு திரட்டும் முறையின் நன்மை தீமைகளை ஆராய்க.

(c) வினாக்கொத்து மூலம் தரவுகள் திரட்டுவது மிகவும் பொருத்தமானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களை ஆராய்க.

(d) மாறிகளை அளவிடும் மனப்பாங்கு ரீதியான அளவு கோலாகிய லிக்கட் அளவு கோல் பற்றி (Likert Scale) விபரிக்குக.

**(20 புள்ளிகள்)**

5\. (a) குழுவாக்கப்பட்ட எழுமாற்று மாதிரியமைத்தல் (Stratified Random Sampling) முறையை விளக்குக.

(b) மாதிரியமைத்தல் கோட்பாடுகளில் (Principles of Sampling) ஒன்றைப் பற்றி விளக்குக.

(c) ஆய்வுகளில் தரவு முன்வைத்தலுக்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான முறைகளை விளக்குவதுடன் புள்ளிவிபர பகுப்பாய்வு முறைகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(d) ஆய்வு முன்மொழிவு ஒன்றில் உள்ளடங்கும் விடயங்களை சுருக்கமாக குறிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**